"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஐப்பசி 2005 – பங்குனி 2006

வைய நீடுக! மாமழை மன்னுக!
மெய் விரும்பிய அன்பர் விளங்குக!
சைவ நன்னெறிதான் தழைத்து ஓங்குக!
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே! – பெரியபுராணம்

## சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்



இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மீகக் காலாண்டிதழ்


SB SEETHARAM & CO LIMITED
SEETHARAM & CO LIMITED
432 - 434 HIGH STREET NORTH, MANOR PARK
LONDON E12 6RH
Travel & Tours
Money Transfer
Estate Agent
Call Free Phone 0800 001 5759
Tel: 020 8552 0759 Fax: 020 8586 0954
24 Hours Hotline : 07985 117 476
SB SEETHARAM & CO LIMITED
SEETHARAM & CO LIMITED
Estate Agent
MORTGAGE
COMMERCIAL
&
RESIDENTIAL
Property Management
Sales & Lettings
For Reliable service & Proper Advise
Contact our Professional team
CHEQUEPOINT
Money Transfer
Worldwide Money Transfer
Special service to Sri Lanka,
South India – Home Delivery
Best Rates Given
MONEY TRANSFER
SB SEETHARAM & CO LIMITED
SEETHARAM & CO LIMITED
Travel & Tours
Call now for the best
Fare to world destinations
Colombo
Madras
Dhaka
Singapore
Canada
Worldwide Travel & Tours
Travel Insurance
Holiday Packages
Visa
Route Your Travel Plans through us
&
Enjoy every moment of your journey
Right Price.....Right Choice....
Right Round the World......
Reliable Services
Travel Service
Cheap Flight Tickets
Estate Agent
Property management
Sales
Lettings
MORTGAGE COMMERCIAL & RESIDENTIAL
Money Transfer
Worldwide service
Special services to Sri Lanka & South India
Talk to our Friendly Professional Team
Multilingual Advisory Service
You can talk to us in English,
Tamil, Sinhala, Hindi, Urdu, Bangali.
Our Philosophy: A single minded goal:
TOTAL CUSTOMER SATISFACTION!

மணி 14

# கலசம் KALASAM

ஒலி 52 /53

www.smsuk.org.uk E-mail: kalasam @ gmail.com

சிவமயம்

# தளிர்த்து வரும் தமிழ்க்கலைகள்

தாய் மண்ணிலிருந்து பறந்து வந்து வெளிநாடுகளில் வேர் ஊன்றிய எமக்கு எப்பொழுதும் எதிர்காலம் எப்படி அமையும் என்ற கேள்வி எழுவது இயற்கை. தமிழ் இங்கு வாழுமா? சமயம் இங்கு செல்லுமா? கலைகள் குன்றிப்போகுமா? இவையெல்லாம் தமிழ்ச் சமூகத்தின் மேம்பாட்டை விரும்பியவர்களுக்கு அச்சத்தை அளித்த கேள்விகள். அந்த அச்சமே அடிப்படையாகி, சாதாரண மனிதர்களையும் சமூக சேவைகளில் ஈடுபடவைத்தது. தேவையே தாயாகி தமிழாசிரியர்களையும், ஆலயங்களையும், கலைக்கூடங்களையும் உருவாக்கியது. அதன் பயனை நாம் இப்பொழுது கண்கூடாகக் காணமுடிகிறது.

எத்தனை சிறுவர் சிறுமியர்கள், எத்தனை விதமாக கலைகளை, எத்தனை ஆர்வத்துடன் பயின்று வருகின்றார்கள் என்பதைக் கடந்த நவராத்திரி விழாக்களிலும் கலை விழாக்களிலும் கண்டு களித்திருப்பீர்கள். எத்தனை ஆலயங்கள் உண்டோ அத்தனையும் இவர்களுக்கு மேடை அமைத்துக் கொடுக்கின்றன. இளம் சந்ததியினர் மத்தியில் தமிழுக்கும், சமயத்திற்கும் பற்றுக்கோடாக இன்று அமைந்திருப்பது கலையே ஆகும். தம்மைத் தமிழர் என்று இச்சிறார்கள் இனம் காணுவது இதுபோன்ற கலை நிகழ்வுகளிலேயே நிகழ்கின்றது.

ஆலயங்கள் போட்டிபோட்டுக்கொண்டு ஆரம்பிக்கப்படக்கூடும். அரங்கேற்றங்கள் போட்டி மனப்பான்மையில் நிகழக்கூடும். ஆனால் நன்மை விளைவிக்கும் போட்டியானால் அதுவும் காத்திரமானதே. இக்கலைகளைப் பயில்பவர்கள் எல்லோரும் அவற்றில் உன்னதமானவர்களாக வருவதில்லை. அது இயற்கையே. ஆனால் இவற்றைப் பயில்பவர்கள் எல்லோர் மனதிலும் இக்கலைகள் பற்றிய உயர்வான மதிப்பை இப்பயிற்சி உருவாக்குகின்றது. இதுவே எமது கலாசாரத்தை இன்னொரு தலைமுறைக்குக் கடத்திச் செல்லக் கூடிய வித்தாகவும் அமைந்துவிடுகின்றது.

பல மாணவர்கள் அரங்கேற்றத்துடன் தமது பயிற்சியை நிறுத்திக் கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அரங்கேற்றம் என்பது முடிவல்ல, ஆரம்பம். இதை வலியுறுத்தி அவர்களின் தொடர்ச்சியான கலைப் பங்களிப்பை ஊக்குவிக்கு முகமாக சைவ முன்னேற்றச் சங்கம் அரங்கேறிய அற்புதங்கள் என்ற நிகழ்ச்சியை வருடம் தோறும் நிகழ்த்தி வருவதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். எனவே நாம் எல்லோரும் எமது பிள்ளைகளை ஏதாவதொரு தமிழ்க் கலையைப் பயில ஊக்குவிப்போமாக.

சி. அற்புதானந்தன்
கலசம் ஆசிரியர்

**நிர்வாகக் குழு**

திரு.சி.அற்புதானந்தன், திரு.சிவ.அசோகன், திரு.சி. தம்பு, திரு.சு.வைத்தியநாதன், திரு.வ.இ.இராமநாதன், திரு. ந. நவநீதராசா, திரு.ந.சிவராசன், திரு.செ.தர்மலிங்கம், திரு. ம. ஜெயசீலன், திரு.ஸ்ரீரங்கன், திருமதி.சி.தமிழரசி

**தொடர்பு முகவரி:** 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# முதற்சைவருக்கு சைவ முன்னேற்றச் சங்கத்தினரின் முறையான வணக்கம்

எப்போதும் இனியபிரான் இன்னருளால் அதிகரித்து
மெய்ப்போத நெறிவந்த விதிமுறைமை வழுவாமே
அப்போதைக் கப்போதும் ஆர்வமிகும் அன்பினராய்
முப்போதும் அர்ச்சிப்பார் முதற்சைவ ராம்முனிவர்.

\- பெரியபுராணம், 4160.



இன்று மேற்குலகில் சைவசமயிகளுக்கு ஒரு மேலான வழிகாட்டியாகத் திகழும் இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ கயிலை இராம. நாகநாதசிவம் அவர்கள் ஐம்பதாவது அகவை அடைகிறார்.

இச் சிவவேதியரை இவ்வுலகத்திலுள்ள அனைத்து புனிதர் பேரவைகள் சார்பாக சைவ முன்னேற்றச் சங்கம் பல்லாண்டு பல்லாண்டு நீடூழி வாழ்க வாழ்க என வாழ்த்தி மகிழ்கிறது.

கலசம் முதலாவது இதழ் 17-01-1993 அன்று வெளியிட்பட்டது. அதில் இடம்பெற்றிருக்கும் சிவஸ்ரீ கயிலை இராம. நாகநாதசிவம் குருக்கள் அவர்களது வாழ்த்துப் பாவை நாம் மீண்டும் இங்கு அச்சேற்றிப் பார்த்து மகிழ்கின்றோம்.

உலகத்தின் நாயகனாம் உமைபாகன் புகழ்பரப்பி
நலம்காக்கும் நற்சைவ முன்னேற்றச் சங்கமதின்
புலவர்பலர் பங்கேற்று பொறுப்புடனே வெளிக்கொணரும்
கலசம்எனும் பத்திரிகை கற்றுணர்ந்தோர் வாழ்த்தவாழி

**-சிவஸ்ரீ கயிலை இராம. நாகநாதசிவம் அவர்கள்-**

ஸ. ஆனந்ததியாகர்

சதாசிவம் ஆனந்ததியாகர்
கௌரவ பொதுச் செயலாளர்

# அற்புதத் தமிழ்ப் பாடல்கள்

## முருகவே பரமநாதன்-கனடா

***ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தீன் சட்டத்தின் மொழி, கிரேக்கம் இசையின் மொழி, ஜேர்மன் தத்துவத்தின் மொழி, பிரெஞ்சு தூதின் மொழி, இத்தாலியம் காதலின் மொழி என்றும் கூறுவது ஒருபுடை ஒக்கும் எனின், தமிழை இரக்கத்தின் மொழி எனலும் பக்தியின் மொழி எனலும் பொருந்தும். - (தமிழ்த் தூது பக் 34, தவத்திரு தனிநாயகம் அடிகளார்)***

பல்லவர்காலம் பக்தி இலக்கியகாலம் என வரலாற்றாய்வாளர்கள் கூறுவர். இப்பக்தி மொழியில் இன்னும் இலக்கியங்கள் மலர்கின்றன. இனியும் அவை வெளிவரும். தேவாரப்பாட்டாக, பிரபந்தப் பாசுரங்களாக திருவாசகமாக எம்மைப் படிக்கவைக்கும். தோத்திரமாலைகள் பிரார்த்தனைக்குப் பெரிதும் உவந்தன. இரட்சண்யயாத்திரிகம், தேம்பவாணி கிறீத்து வத்திலும், மணிமேகலை, ஆசிய ஜோதி பௌத்தத்திலும், சீறாப்புராணம் இசுலாத்திலும் எடுத்துக்காட்டாகக் கொள்ளக்கூடியன. இறைவன் புகழ் பாடும் இப்பாமாலைகள் நித்தியபாரயணப் பனுவல்களாகும். தமிழ் வேதம், திராவிடவேதம் எனப் போற்றப்படுபவை. கனிவும் கடாட்சமும் நிறைந்து தித்திப்பன.

இவற்றை அனுபவித்த தாயுமானசுவாமிகள் தன்பாடல்கள் அவற்றிற்கு எம்மாத்திரம் என உரைத்துப் பாடுகின்றார்.

*பண்ஆரும் இசையினொடு, பாடிப், படித்து, அருள்*
*பான்மை நெறி நின்று தவறாப்*
*பக்குவ விசேஷராய் நெக்கு நெக்கி உருகிப்*
*பணிந்து எழுந்து, இருகை கூப்பிக்*
*கண்ஆறு கரைபுரள நின்ற அன்பரை எலாம்*
*கைவிடாக் காட்சி உறவே*

- கருணாகரக் கடவுள்

கன்னல் அமுது எனவும், முக்கனி எனவும் வாய் ஊறு கண்டு எனவும் அடிஎடுத்துக்
கடவுளர்கள் தந்தது அல, அழுது அழுது பேய் போல் கருத்தில்எழு கின்ற எல்லாம்
என்னது அறியாமை அறிவு என்னும் இரு பகுதியால் ஈட்டுதமிழ், என் தமிழினிற்கு
இன்னல்பகராது உலகம் ஆராமை மேவிட்டு இருத்தலால்..

கன்னல் - கருப்பஞ்சாறு, வாய்ஊறு கண்டு வாயில் அடக்கியுள்ள கற்கண்டு, அடிஎடுத்துக் கடவுளர்கள் தந்தது அல-திருவருள் அடியெடுத்துக் கொடுக்கப் பாடியதல்ல. ஈட்டு தமிழ் - சொல்லிய தமிழ்ப் பாட்டாகும். என் தமிழினிற்கு - அப்படி என்னால் பாடப்பட்ட தமிழ் பாட்டிற்கு இன்னல் பகராது உலகம்- உலகம் குற்றம் கூறாது. ஆராமை மேலிட்டு இருத்தலால்- அன்பு அதிகப்பட்டிருத்தலால்.

மொழிக்கு மொழி தித்திக்கும் பக்திப்பாமாலை-களை அருளிச்செய்த தாயுமானவர் எம் பெருமானிடம் பூமாலையா- பாமாலையா உனக்கு விருப்பம் எனக் கேட்கின்றார்.

நாவழுத்தும் சொல்மலரோ நாள் உதிக்கும் பொன்மலரோ தேவை உனக்கு இன்னது என்று செய்யாய் பராபரமே

-(பராபரக்கண்ணி 247)

விபுலானந்த அடிகளும் இதே பாணியில் ஈசன் உவக்கும் மலர்கள் பற்றிப் பாடியுள்ளார். செவிநுகர் கனிகள் எனக் கரும்பும், கீர்திக்கனிகள், கீர்த்தங்கள் என ஆழ்வார்களும், பாடும் கவியின் பெருமையே பெருமை. இதனாலோ என்னவோ பாரதியார் “அணிகொள் சாத்திரம் ஆயிரம் கற்பினும் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளம் காண்கிலார்” எனப் பாடினார்.

நம்முடைய காலத்தில் வாழ்ந்த காஞ்சிப் பெரியவர் இந்த தெய்வீகப் பாடல்களின் சிறப்பை இன்றைய சமுதாயத்திற்கு எடுத்துச் சொல்லத் தவறவில்லை.

“பூமாலை கண்ணுக்கு அழகு, பாமாலை காதுக்கு அழகான சொல்லும் சந்தமும் ஆன ரூபத்தில் இருக்கிறது”. பூமாலைக்கு வாசனை மாதிரி, பாமாலைக்கு அதன் அர்த்தம். பூமாலையிலிருந்து தேன் வருகின்றது என்றால் பாவில் இருந்து கிடைக்கிற ராசாநுபவம் தான் மனசுக்குத் தேன் மாதிரி. பூமாலை-பாமாலை என்று சொல்கிறோம் அல்லவா? ஒரு வித்தியாசம் பூமாலை வாடிப்போவது பாமாலை லோகமுள்ள அளவும் வாடாது.

-தொகுப்பு (தெய்வத்தின் குரல் பக்கம் 615)

இறைவன் உரையே தம்முரையாகவும் இறைவடிவமே தம்வடிவாகவும் யாத்த கவிதை மாலைகள் இன்று ஓரம் போகக் காணலாம்.

அனுபவம் மிக்க முதியவர்கள் கூடத் திருமுறைகளைச் செத்தவீட்டுப் பாடலென வாய்கூசாது கொச்சைப்படுத்தி விட்டு தெருப்பாடல்களையும், மருட்பால்களையும் பாடுகின்றனர். சைவம் இந்துவாகி கிறீஸ்தவமாகும் பாதையில் நடக்கும் நம் சமூகம் நாவலர் பெருமான் கட்டிய வைரமதிலை உடைக்க முன் சிந்திக்க வேண்டும். பக்திச் சுவட்டில் வைராக்கியக் கல் பதித்து நேர்த்தியாகவும், ஆழமாகவும் இன்று நம் நம்முத்திரைகளைப் பதிக்க வேண்டும். பாட்டருமையை இனிவரும் அனுபூதி கவிதையிற் காண்போம்.

அற்புதம் செறிந்த சித்திரம் நிறைந்த அருமை சேர்
பாடல்கள் சொல்லும்
நற்பதம் உனக்கில்லை போ என்று நாதநீ
கூறுவையாகிப்
சொற்பதம் வேண்டாம் சுகமுறச் சும்மா இருத்தி
என்றேனும்
அற்பனுக்கோர் சொல்விளம்புதி கருணை வள்ளலே
தணிகை நாயகனே--
(தணிகை நாயகன் மாலை)

என்ன செவ்வை நிறைந்த பாடல் இது. பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வனான எம் பெருமானின் திருவடிப் பெருமையே பெருமை. விழுமியம் தரும் இப்பாடலை மீண்டும் மீண்டும் கேட்போம்.

தணிகை நாயகன் மாலை பாடிய நூலாசிரியர் கவிதை வடிவிலே வர்ணிக்கப்படும் முருகனது திருவடிப்பேறு கிடைக்காவிடினும் பரவாயில்லை. சும்மா இரு என்னும் மகாவாக்கியம் கிடைத்தால் போதும் என்கிறார்.

முருகன் அருணகிரியாருக்கும், மௌனகுரு சுவாமிகள் தாயுமானார்க்கும், செல்லப்பா சுவாமி யோகர்சுவாமிக்கும் சும்மா இருக்கின்ற கலையை உபதேசித்தனர். அதனாலேயே அவர்கள் அனுபூதி பெற்றார்கள்.

*செம்மான் மகளைத் திருடும் திருடன்*
*பெம்மான் முருகன் பிறவான் இறவான்*
*சும்மா இரு சொல்லற என்றலுமே*
*அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே*

(-கந்தர் அநுபூதி)

ஏதுக்கும் சும்மா இருமனமே! என்று உனக்குப் போதித்த உண்மை எங்கே போவிட்டாய்-வாதுக்கு வந்து எதிர்த்த மல்லரைப் போல் வாதாடினாயே, உன்புந்தி என்னை? போகம் என்ன? போ

(தாயுனமாவர்-உடல் பொய்யுறவு)

என் ஐயா! என் ஐயனே ஏதுக்கும் யாவற்றிற்கும் நீ சும்மா இரு! நீ மவுனமாய் இருப்பாயாக! என உரைத்த எனக்குக் கட்டளை இட்ட, சூதுக்கோ, தந்திரத்திற்கோ, தோன்றா- கண்முன்காணப்படாத துணியாகி-துணையாகிப் போதித்து- உபதேசித்து நின்றதற்கோ, நீக்கி என்னை மாயையின் நின்றும் பிரித்து - மாயா பாசங்களனைத்தும் தலை யெடாதபடி - அடக்கியதற்கோ, பேசாக்குறி பேசாதஅடையாளம்.

ஆக இறைவன் திருவடிகளைச் சேர்வதே ஆன்மாவின் இறுதி யாத்திரை முடிவு. எனவே அதற்கு மன அடக்கம் தேவை. புலனை வென்றால் அடக்கம் தானேயமையும். மனம் போன போக்கெல்லம் போகவேண்டாம் என்பது நீதிவழி. இறை பிரார்த்தனையும், புனிதவாழ்வும் இதற்கு வேண்டும். அதற்காகவே தோத்திரங்கள் எழுந்தன. அந்தமான இத்தேதர்திரங்களால் இறைவனைப் பாடிப்பணிந்து அவனடி அடைவோமாக.

இதனையே மாணிக்கவாசகரும்

*பாடவேண்டும் நான்போற்றி நின்னையே*
*பாடி நைந்து நைந்து உருகி நெக்கு*
*ஆட வேண்டும் நான் போற்றி அம்பலத்*
*தாடும் நின்கழற்போது நாயினேன்*
*கூடவேண்டும் நான் போற்றி இப்புழுக்*
*கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்*
*வீடவேண்டும் நான் போற்றி வீடுதந்*
*தருளு போற்றி நின் மெய்யர் மெய்யனே*

-எனப் பாடுகின்றார்



சிவமயம்

# மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயில்

## ஆலய புனர்நிர்மணத் திருப்பணி நன்கொடை அன்பளிப்பு வேண்டுகோள்.

**பேரன்பும் தாராள சிந்தையும் உள்ள விநாயகர் அடியார்களே!**

அருள் சிறப்பும், வரலாற்றுப்பெருமையும் மிக்க மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயில் முற்றுமுழுதாக புதிய பிரமாண அமைப்பில் சிவாகம விதிக்கமைய கருவறை கருங்கற்களால் கட்டப்பெற்று கட்டப்பெற்று வருகின்றது. ஆலயம் உட்சுற்றுப் பிரகாரக் கோவில்கள் வசந்த மண்டபம் கோபுரம் மண்டப வாயில்கள் யாவும் புதிய கலை நுணுக்க வேலைப்பாடுகளுடன் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இச் சிறப்புத் திருப்பணிகள் யாவும் இந்தியா மாமல்லபுர சிற்பாசாரியார்களாலேயே கையாளப்பட்டு வருகிறது. தற்பொழுது இராஜகோபுரத்தின் ஒரு பகுதித் திருப்பணி வேலைகள் முடிவடைந்துள்ளது. மற்றும் வடக்கு வாசல் கோபுரம் தெற்கு வாசல் கோபுரம் ஆகியவற்றின் திருப்பணிகள் பூர்த்தியாகியுள்ளன. பிரதான இராஜகோபுரத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் உட்சுற்றுப்பிரகார வேலைகளும் நடை-பெற்று வருகின்றது.

இப்பாரிய ஆலய திருப்பணி வேலைகள் பூர்த்தியாவதற்கு எமக்கு இன்னும் பலகோடி ரூபாக்கள் தேவைப்படுவதனால் மருதடி விநாயகப் பெருமான் அடியவர்கள், சைவ அபி-மானிகள், ஆவலர்கள் அனைவரையும் அன்புடன் இவ் வாயலயத் திருப்பணிக்கு உதவிகள் செய்யுமாறு பணிவன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

உங்களாலான பொருள் உதவி, பண உதவி செய்து எம்பெருமானின் இப் பாரியகோயில் திருப்பணிகள் யாவும் எதிர்வரும் 2007 ஆம் ஆண்டு நிறைவு பெற்று அவ்வாண்டின் தமிழ் வருடப்பிறப்பு தினத்தில் எம்பெருமான் மருதடியான் தேர் ஏறி எமக்கு அருள் செய்ய உங்களாலான பணஉதவியை வாரிவாரி வழங்குவீர்கள் என மிகவும் கருணையுடன் வேண்டி நிற்கின்றோம்.

ஆலய வங்கிக் கணக்கு இலக்க விபரம்:
வங்கி : இலங்கை வங்கி மானிப்பாய் கிளை
கணக்கின் பெயர்: மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய
தர்மகர்த்தா சபை நடைமுறைக் கணக்கு இலக்கம்: **C 002279-8**
அன்பர்கள் காசோலையாக அல்லது காசுக்கட்டளையாக
மேற்குறித்த வங்கிக் கணக்கு இலக்கத்திற்கு அனுப்பலாம்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**

**திரு. ந. விவேகானந்தராஜா**
**செயலாளர்**
**தொலைபேசி இலக்கம்: 0094 214591022**

**திரு. சு. சிவகுமாரன்**
**பொருளாளர்**
**தொலைபேசி இலக்கம்: 0094 212222751**

# நல்லை நாவலன் புகழ் பாடுவோம்



-இளம்பிறையாளன்-

என்னரிய சைவநெறிப் பெருங்குடியீர்!
எழுந்திருங்கள் எங்கள் நாவலரைப்
பன்னரிய பைந்தமிழாற் போற்றிடுவோம்
பாடுகின்ற பாவலரே வந்திடுங்கள்
துன்னரிய பாவினங்கள் பலநவின்றே
தூயதமிழ்க் காவியங்கள் வடித்திடுவோம்
மன்னரிய மன்னவராம் தமிழ் விரகன்
மாற்றுயர்ந்த நாவலனின் நலன்களெங்கும்

நாவினிக்க நம்மனமினிக்கப் பாவியங்கள்
நாடெல்லாம், நாளெல்லாம் நவின்றிடுவோம்
பாவினிக்க, பண்ணினிக்கப் பாடிடுவோம்
பாரெங்கு மவன் புகழைப் பரப்பிடுவோம்
பூவினிக்க, புனலினிக்க பூமிதானினிக்க
புரவலனாய் வந்துதித்த புத்தொளியை
ஆவினிக்க அதன் கன்று தான் இனிக்க
ஆறுமுக நாவலனைப் பாடிடுவோம்

தென் தமிழும் வடமொழியும் சேர்ந்துள்ளானை
தேச மெங்கும் பேசுகின்ற ஆங்கிலத்தை
தன்மொழிபோற் சரளமாகக் கற்றுள்ளானை
தாய்மொழியும் தன் மதமும் போற்றுவானை
இன் தமிழில் இலக்கண இலக்கியங்கள்
எல்லாமே இயற்றினானை இவ்வுலகில்
தன்மொழியை தகைசான்ற சைவமதை
தன்னிரு கண்மணியாய்ப் போற்றினானை

இங்கிதங்கள் பல தெரிந்த இன் தமிழன்
இங்கிலீசின் இசையறிந்து எழுதுவானை
சங்கநிதி பதுமநிதி எனத் தமிழைச்
சபைகளிலே எழுந்திருந்து முழங்கினானை
பங்கமிலாச் சைவநெறி எழுச்சிகொளப்
பாங்கான சேவை பல இயற்றினானை
சங்கைபல தன் பெயரோ டிணைத்துளானை
சாதனைகள் பலபுரிந்த தமிழன் தன்னைப்-
போற்றுதுமே

கொண்டலெனத் தமிழ் பொழியும் கொள்கையானே
கொள்கை வழி தன் வழியாய்க் கொண்டுளானே
வண்டமருந் துளவோனின் மனமெல்லாம்
வண்டமிழின் பின்சென்ற வாறேபோலத்
தண்டரள அருவியெனத் தமிழ்மாரி
தனைப் பொழிந்தே தரணியெல்லாம் தமிழொலிக்க
விண்டபல நூல்வரிசை விளம்பப்போமோ
வித்தகனாம் நாவலநின் விரைமலர்த்தாள்
- தஞ்சமாமே

வேற்றுமத வேள்விகளைத் தகர்தெறிந்து
வேண்டுமட்டும் அயராது உழைத்தவனே
நாற்றமென நம்மதத்தை கேலிசெய்யும்- பிற
நாட்டவரை உணரவைத்த நாயகனே!
ஊற்றமென ஊறுகின்ற ஊற்றுக்கண்ணே!
உத்தமனே உறுதுணையே உதயமே நீ வாழ்க!
தேற்றமெலா மெமக்களித்த தென்னவனே!
தேன் தமிழை நாமெல்லாம் உணரவைத்த-
உத்தமனே!

கன்னலொடு கற்கண்டு கலந்தாலென்ன
கனகமிகு தமிழ் வளர்த்த நாவலனே
செந்நெலொடு சேர்ந்தவொரு தவிடுபோல
சே மமுற நீவடித்த நூல்களெல்லாம்
நென்னலொடு இன்று முதல் நாளையெல்லாம்
நேர்நின்று நம்மினத்தைக் காக்கவேண்டும்
கன்னலொடு கலந்தவொரு தேனைப் போன்றே
கவிதந்த காவலனே நின் கீர்த்திவாழ்க

நாவல நின் புகழ் வாழி ஞாலம் வாழி
நாவல நின் நெறிவாழி நீதி வாழி
நாவல நின் கலை வாழி கண்ணியம் வாழி
நாவல நின் கடமைவாழி கட்டளை வாழி
நாவல நின் புதுமைவாழி புலமைவாழி
நாவல நின் நாவாழி நாற்கவிவாழி
நாவல நின் சைவம் வாழி சதுரரும் வாழி
நாவல நின் தொண்டும் வாழி வாழி வாழியவே

ஒரு மனிதனின் பழக்க வழக்கங்களும் ஒழுக்கமும் நம்பிக்கையும் சமய வழிபாடோடு தொடர்புடையவை. சமயவாழ்க்கையோடுதான் மக்களின் அறநெறிகள் கூட இணைந்துள்ளன. மனம் கனிந்து செய்யும் வழிபாடுதான் ஆலயத்தில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் திருவுருவங்களைக்கூட தெய்வ சாந்நித்தியம் நிறைந்தவையாக மக்களுக்குக் காட்சி கொடுக்கச் செய்கின்றது.

அன்னையின் முகமதியில் ஒன்றி தன்னை மறந்திருந்த பட்டரைக் கண்டு "இன்று என்ன திதி" என்று மன்னன் கேட்டான். பட்டரோ "பௌர்ணமி" என்றார். தெருக்கதையும், காதில் பட்டவையும் மெய் எனக் கருதினான் மன்னன். "இன்று பௌர்ணமி என்று கூறிய நீங்கள் எனக்கு மாலை வானில் முழு மதியைக் காட்ட வேண்டும். இல்லாது விடில் தங்களுக்கு மரணம்" என்றான். அந்நேரம் வரை அபிராமி அன்னையின் அருள்

# அன்னை அபிராமியும் பட்டரும்

கந்தையா சண்முகநாதன் (ஓய்வு பெற்ற அதிபர்)

மக்களின் உருக்கமான வழிபாட்டாலே அத்திருவுருவம் எங்கள் முன்னிலையில் கடவுளாக விளங்குகின்றது.

ஆலய வழிபாடு எல்லோராலும் கைக் கொள்ள வேண்டிய சிறந்த வழிபாடு. வழிபாட்டிற்கு தேவார திருவாசகங்கள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் ஆகியவை சைவ சமய வழிபாட்டிற்கும் சிவபூசைக்கும் அன்பு நெறிக்கும் சரியை, கிரியை, யோகம், ஞானம், போன்றவற்றின் நிறைவுக்கும், அடியவர் பூசைக்கும் நியம மந்திரங்களாக உள்ளன.

இந்த வழிபாட்டால் இறை அருளைப் பெற்றவர் ஆன்மிக வளர்ச்சிக்கும் மன அமைதிக்கும் நிறை ஞானி ஆன ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்சர் வழியில் வந்தவரான அபிராமிப்பட்டர் என்ற சுப்பிரமணிய ஐயர் அவர்கள்.

இவர் அன்னை அபிராமியின் முகமதியில் ஒன்றித்த பேரருளாளர் ஆவார். இவர் வெளிவேடம் பலரது கண்ணுக்கும் பொய்வேடமாகத் தோன்றவே குடியன், ஊனன், மனமயக்கமுற்றவன் எனப் பலவாறு கூறினார். இன்றும் இங்கே அவரவர் தன்மை அறியாது பூச்சும் பிறையும், உருத்திரா'மாலையுமாய் ஆலய வாசல் தோறும் திரிவோர் பலரைக் கள்வனோ? கபடனோ? யார் அறிவர் என்று பேசுவது போலப் பேசிக் கொண்டார்கள். அன்று அந்த ஆலயத்திற்கு வந்த அந்நாட்டு மன்னன் சரபோஜியிடமும் திருக்கடவூர் ஐயரைப் பற்றி கூறாது விட்டிருப்பார்களா?

அன்று தை மாத அமாவாசை திதி. அபிராமி வெள்ளத்தில் மூழ்கித் திளைத்திருந்த பட்டர் உலகமுகப்பட்டார்.

நிகழ்ந்ததை உணர்ந்தார். அன்று திதியோ அமாவாசை. கேட்டவனோ மன்னவன். மன்னவனின் வினாவிற்கு முரண்பட்ட விடை சொன்னதற்கு வருந்தினார். நாம் எது கூறினாலும் அன்னையின் அருள் வழியே தான் கூறிஇருப்பேன். எனவே அன்னையிடத்திலேயே குறைகளை முறையிடுவேன் என்று எண்ணியவாறு அந்தாதி பாடத்தொடங்கினார்.

*உதிக்கின்ற செங்கதிர் உச்சித்திலகம் உணர்வுடையோர்*
*மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம்போது மலர்க்கமலை*
*துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன*
*விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழித்துணையே*

உதிக்கின்ற சூரியனை தனது உச்சித் திலகமாகக் கொண்டவளும், அறிவுடையோர் தெரிந்து மதிக்கின்ற உயர்ந்த மாணிக்க கல்லைப் போன்ற சிவப்பு நிறத்தை உடையவளும், மாதுளம் பூப்போன்ற சரீர காந்தியை உடையவளும், தாமரை மலரில் உறையும் மகா லட்சுமியே வணங்கி போற்றும் மின்னல் கொடி போன்றவளும் மென்மையான வாசனை பொருந்திய குங்குமக்கலவை போன்ற மேனியை உடையவளுமான அபிராமியே! என்னை என்றும் கைவிடாத உயர்ந்த துணையாக உன்னைப் பற்றுகின்றேன்.

திருக்கடவூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அம்மையின் பெயரில் பாடப்பட்ட அபிராமி அந்தாதி என்ற நூலின் முதற் பாட்டாகும்.

அந்தாதி என்பது அந்தம் ஆதியாக ஒவ்வொரு பாடலிலும் இறுதிச் சொல்லடி அடுத்த பாடலில் முதலாக வரும்படி அமைத்துப் பாடும் முறை. முடிவும் தொடக்கமும் மாலை போல தொடுத்துப் பாடப் பெறும் ஒரு வகை இலக்கியம். தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் அந்தாதி இலக்கியமும் ஒன்று. இவற்றை நாயன்மார்களுடைய திருமுறைகளிலும் காணலாம்.

அம்மையே அம்பிகையே நீயே துணையும், தொழும் தெய்வமும், பெற்ற தாயும், என்ற சிந்தனையாளராகப் பாடிக்கொண்டே இருந்தார். எழுபத்தொன்பதாம் பாடலாகிய "விழிக்கே அருள் உண்டு" என்று பாடும் பொழுது அன்னை அவள் தன் தாடங்கத்தை கழற்றி வானில் வீசியதால் முழு நிலவு தோன்றியது.

அதனைக் கண்டு மன்னனும் மகிழ்ந்து அவரை வழிபட்டு அபிராமி பட்டர் என்ற பட்டத்தைச் சூட்டினார். ஆலயத்திற்கு காணி நிலங்களும் அளிக்கப்பட்டன.

அம்பிகைக்கு மீனாட்சி, காமாட்சி, விசாலாட்சி என்னும் பெயர்கள் இருக்கின்றன. மீனாட்சி - மீன் எப்போதும் கண் மூடுவதில்லை. அம்பிகையும் மீனின் கண்களையுடையவர். பெருவிழிப்புடையாள். காமாட்சி - அவள் கடைக்கண் பார்வையால் ஜீவ கோடிகளின் ஆசைகளை நிறைவாக்கி வைப்பாள். விசாலாட்சி - விசாலமான பார்வையை உடையாள் எங்கும் நிறைந்திருப்பாள். அவள் காட்சி கொடுக்கும் திருக்கோலத்தைக் காண ஆயிரம் கண்கள் போதாது. அவள் கரங்களில் தாமரை நீலோற்பலம், செவ்வல்லி, செவ்வாம்பல், மாம்பூ என்ற ஐந்து புஷ்ப பாணங்களையுடையவள். இத்திருக் கோலத்தில் திரிபுர சுந்தரியைக் குறிக்கும்.

துணையும் தொழுந் தெய்வமும் பெற்ற தாயும்
சுருதிகளின்
பணையும் கொழுந்தும் பதி கொண்ட வேரும்
பனிமலர்ப் பூங்
கணையும் கரும்புச் சிலையும் மென்
பாசங்குசமும் கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே

-அபிராமி அந்தாதி


# MARKANDAN & UDDIN SOLICITORS

**SOLICITORS AND ADMINISTRATORS FOR OATHS**
**M.MARKANDAN LLB A.UDDIN LLB (Hons) MA.LLM PhD-RFL**

**MARKANDAN HAS RETURNED TO THAMIL HOUSE**

**Last will, Power of Attorney, Sponsorship Declarations**

***We specialise in***
For all you needs *in Immigration (all aspects up to House of Lords), Commercial & Residential Conveyancing, Employment, Civil Litigation, Consumer Problems, Last Will, Power of Attorney, Sponsorsh*ip Declaration, HSMP, Work Permits Most of the Asian Languages spoken.

Contact:

| | | | |
|---|---|---|---|
| M.MARKANDAN | 07956 386 576, | UDDIN | 07957 455 670 |
| KURUP | 07748 764 079, | GILBERT | 07946 318 470 |
| MAHENDRAN | 07881 650 472 | MATHU | 07830 285 634 |
| JASOKUMAR | 07961 996 482 | SONG | 07952 769 656 |
| SHIYAM | 07793 134 335 | | |

**Markandan & Uddin Solicitors**
**Tamil House, 720 Romford Road, London, E12 6BT**
**Tel: 020 8514 8300 / 07830285 634 Fax: 020 8514 8381**

# நூலறிமுகம்

## தேவமணி ர.ஃ.பேலின் தமிழ்நாட்டுக் கலைக்கோயில்கள்




உலகிலேயே தமிழகமே வானளாவிய கோபுரங்களைக் கொண்ட கோயில் வளம் பெற்ற நாடாகத் திகழ்கின்றது. அன்றைய மக்களும், மன்னரும் கோயில்களை மையமாகக்கொண்டே வாழ்ந்திருந்தனர். காலந்தோறும் அவர்கள் செய்த திருப்பணிகளால் கோயில்கள் கட்டிடக் கலையோடு நின்று விடாமல் சிற்பம், ஓவியம் என எல்லாத் தெய்விகக் கலைகளையும் வளர்த்துப் பேணும் கலைக் கூடங்களாக சைவக் களஞ்சியங்களாக விளங்கின.

ஆனால் மேலை நாட்டவரின் ஆக்ரமிப்பின் பின்னர் 16ஆம் நூற்றாண்டு முதலாகத் தமிழகத்தில் தமிழர் ஆட்சிப்பீடங்கள் நிலைகுலையலாயின. மக்கள் வாழ்க்கை முறைகளிலும் அந்நியர் கலாசாரங்கள் ஊடுருவலாயின. அதனால் கோயிலைச் சார்ந்து புனிதமாக வளர்ந்த அத்தனை கலைகளும் உலகியல் நோக்கில் வளரமுற்படலாயின. இந் நிலை கோயில்களின் வளர்ச்சியில் ஒரு பின் தங்கலை இடம்பெறச் செய்யலாயிற்று. அதுவும் அண்மைக் காலங்களில் தமிழகத்தில் வானாளாவிய கோபுரங்களைக் கொண்ட தெய்விகக் கட்டிடங்களை விஞ்சிய உலகியற் கட்டிடங்களால் கோயில்களின் புனிதம் குறையலாயிற்று. அதனால் படிப்படியாகப் பழைய கோயில்கள் பல கண்காணிப்பின்றி வெறும் கட்டிடங்களாகக் கருதிக் கைவிடப்படலாயின.



இத்தகைய பரிதாபமான சூழ்நிலையில் ஒரு திருப்பணியாளர் சைவத்தின் பழம் பெருமையைப் பேணமுன்வந்தார். அவர்தான் தேவமணி ர.ஃ.பேல் அவர் தன் பணியில் தமிழ் நாட்டுக்கோயில்களில் 21 கோயில்களை அழகான உயிர்ப்பூட்டமிக்க நிழற்படங்கள் மூலம் பேணி, அவற்றுடன் தொடர்பான வரலாறுகளையும் விபரித்து நூல்வடிவில் பேணியிருக்கின்றார்.

அவரது மதி நுட்பத்தை வெளிக்கொணர உறுதுணையாக இருந்த எழுதுகோலும் அவ்வளவு வலிமையுடையதாய் விளங்குகின்றது.

அழகான வண்ணப்படங்கள் அத்தனையும் கோயிற் சிற்பங்களையும் ஓவியங்களையும், இம்மியும் பிசகில்லாமல் பேணுகின்றன.



ஒட்டு மொத்தத்தில் காலந்தோறும் திருப்பணிகள் செய்து மாண்டுபோன அத்தனை கோயிற் கட்டிடக்கலைஞர்களும், சிற்பிகளும் ஓவியர்களும் இந்நூலில் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறு பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் உருவாக்கிய தமிழ்நாட்டுக் கோயில்களை எல்லாம் இவர் தனித்து ஒருவராகச் செய்து இந்நூலில் பேணிப் பாதுகாத்திருக்கின்றார். இவரது இத் திருப்பணியை இலங்கை உள்ள அச்சகமே அச்சேற்றி சிறப்பாக வெளியிட்டுள்ளது.




பல்லாண்டுகளாக இவர் பாடுபட்டதன் மூலம் உருவாகிய இந்நூலினை சைவ அன்பர்கள் வாங்கி வீடுகளில் வைத்திருப்பின் தமிழகக் கலைக்கோயில்களைத் தமது வீடுகளுக்குள்ளேயே வைத்திருந்து மீண்டும் மீண்டும் பார்த்து இன்புற முடியும். இவ்வரிய கலைப் பொக்கிஷத்தை ஆங்கிலத்திலும், தமிழிலும் பெற்றுக்கொள்ள சைவ முன்னேற்றச் சங்கம் வழிசெய்துள்ளது.



**இந் நூலினைப் பெற விரும்புவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:**

**020 8514 4732**

அம்மனைச் சரண் அடைந்தால் அதிக வரம்பெறலாம்

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

# Shri Kanaga Thurkkai Amman Temple

**5 Chapel Road, London W13 9AE Tel: 020 8810 0835, 020 8840 0485**

www.ammanuk.org Charity No: 1014409 www.changetheirlife.org

பிரித்தானிய திருக்கோவில்கள் ஒன்றியம் — The Federation of Saiva (Hindu) Temples, UK.

விம்பிள்டன் ஸ்ரீ கணபதி கோவில். ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கோவில். இலண்டன் சிவன் கோவில்
ஸ்ரோன்லி ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் கோவில். உயர்வாசற்குன்று முருகன் கோவில்.







14.01.06 தைப்பொங்கல்

11.02.06 தைப்பூசம்

26.02.06 மஹாசிவராத்திரி

13.03.06 மாசி மகம்

14.04.06 வியயபுது வருஷப் பிறப்பு,
சித்திரை மாதப்பிறப்பு

12.05.06 சித்திரா பௌர்ணமி

18.07.06 1ம் ஆடிச் செவ்வாய்

21.07.06 கொடியேற்றம்

25.07.06 2ம் ஆடிச் செவ்வாய்

01.08.06 3ம் ஆடிச் செவ்வாய்

04.08.06 வரலட்சுமி விரதம்

08.08.06 4ம் ஆடிச் செவ்வாய்

13.08.06 தேர்

14.08.06 தீர்த்தம்

15.08.06 ஆடி கடைசிச் செவ்வாய்

23.09.06 நவராத்திரி விரதாரம்பம்,
1 புரட்டாதிச் சனி

29.09.06 சரஸ்வதிப் பூசை ஆரம்பம்

30.09.06 2 புரட்டாதிச் சனி

07.10.06 3 புரட்டாதிச் சனி

14.10.06 கடைசிச் சனி

20.10.06 தீபாவளி

22.10.06 கந்தஷஷ்டி விரதாரம்பம்

28.10.06 சூரசம்ஹாரம்,
கந்தசஷ்டி பாறணை

20.11.06 1வது சோமவாரம்

27.11.06 2வது சோமவாரம்

03.12.06 திருக்கார்த்திகை
விரதம், குமராலய தீபம்

04.12.06 3வது சோம வாரம்

05.12.06 விநாயகர் விரதாரம்பம்

11.12.06 கடைசி சோமவாரம்

25.12.06 விநாயகர் ஷஷ்டி பூர்த்தி
திருவெம்பாவை ஆரம்பம்

கோவிலின் செலவுகள் தவிர்ந்த காணிக்கையில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்காக பயன் படுத்தப்படுகிறது

## Opening Hours

**Mon, Wed & Thu.**
8.00am - 3.00pm
5.00pm - 10.00pm
**Tuesday & Friday**
8.00am-10.30pm
**Saturday & Sunday**
8.00am - 10.00pm

## Daily Poojas

8.00am & 12.00noon
5.00pm & 8.00pm

## ABISHEHAMS

Tue & Friday 7.00pm
Other days on request

அன்னதானம், அபிஷேகம், விசேட பூசை, உபயம் மற்றும் ஆலயத்தினூடு தாயகத்தில் இன்னலுற்ற எம்மவர்க்கு உதவிட அழையுங்கள்:
020 8810 0835



அம்மனை சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம்

# ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்

## SHRI KANAGATHURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

*5 Chapel Road, West Ealing, London W13 9AE*

**கோயிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் சிறுவர்களைப் பராமரிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது**

*Charity No 1014409*

## சமய வழிபாடுகளுடன் சமூக சிந்தனையும்



லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்
மட்டக்களப்பு



லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்
பதுளை



விவேகானந்தா இல்லம்
வாழைச்சேனை



லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்
வாஹரை



அன்பகம்
வவுனியா



அன்பு இல்லம்
திருகோணமலை




லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
இலவச பயிற்சி நிலையங்கள் (கணனி, தையல்)
மட்டக்களப்பு



லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
இலவச கணனி வகுப்புகள்
யாழ்ப்பாணம்




லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
புதிய கட்டிடம் - இராமநாதன் மஹாவித்தியாலயம்
யாழ்ப்பாணம்




லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்
இலவச கணனி வகுப்புகள்
திருகோணமலை



கணாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
இலவச திருத்த நிலையம்
முல்லைத்தீவு



லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இல்லம்
மன்னார்




**www.changetheirlife.org 020 8810 0835 / 020 8840 0485**

# திருமூலரின் வாழ்வியற் சிந்தனைகள்

- குமாரசாமி சோமசுந்தரம் -

சென்ற இதழ்தொடர்ச்சி

## 2.00 வாழ்வியல் சிந்தனைகள்
### 2.1 சமயச் சிந்தனைகள்

திருமூலரின் வாழ்வியல் சிந்தனைகளுள் சமயம் சார்ந்த சிந்தனைகளும் இடம் பெறுவற்குரிய காரணம் என்னவெனில், சமயம் வேறு: வாழ்க்கை வேறு என்று பிரித்து நோக்காமல், இரண்டையும் தொடர்புபடுத்தி வாழ்க்கை நெறியாகச் சமயம் திருமூலரால் நோக்கப்பட்டுள்ளமையேயாகும்.

திருமூலர், சமயத்தை வெறும் சடங்குகள், சம்பிர-தாயங்கள் வேள்விகள் இயற்றிவரங்களைப் பெறுதல் என்னும் குறுகிய நோக்கங்களுக்குள் அடக்காது: இறை சிந்தனை, அறம், ஒழுக்கம், மனித விழுமியங்கள் என்பனவற்றை மனிதர்களிடையே வளர்த்து நடைமுறைப்படுத்தும் மாபெரும் சக்தியாகவும் திருமூலர் சமயத்தை நோக்குகிறார். சமயம், மக்கள் வாழ்வுடன் இணைந்து, அவர்களின் வாழ்வைப் பயனள்ளதாக்க வேண்டும்: சமயப் பணிகள், சாதனைகள் யாவும் அனைத்துலகிற்கும் நன்மை பயப்பனவாய், நலந்தருவனாய் அமையவேண்டும் என்ற சீரிய கருத்துக்கள் திருமூலரின் சமயச் சிந்தனைகளில் இழையோடுவதைக் காண முடிகின்றது. உலகந்தழுவிய சமயச் சிந்தனைக-ளாக எக்காலத்திற்கும், எந்நாட்டினர்க்கும் பொருந்தும் தன்மையைன் கொண்டிருந்தலால் திருமூலரின் சமயச் சிந்தனைகள், வாழும் இயல்பையும், வாழ்விக்கும் தன்மையையும் பெற்று மிளிர்கின்றன.

சைவம், திருமூலரின் சமயம். சைவம் சிவ சம்பந்தம் உடையது. சைவ சமயச் சிந்தனைகள் சிவ ஆகமங்களின் அடிப்படையில் எழுந்தவை. மனித நல்வாழ்க்கைக்கு உறுதுணையாவது தூய சைவ நெறியே. திருமூலர் சமயச் சிந்தனைகள் தூய சைவநெறியாகும்.

" ஒன்றவன் தானே... ... ... "
" ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை"

இறைவன் ஒருவனே எனும் உண்மையை மேற்படி திருமூலரின் சிந்தனை வெளிப்படுத்துகிறது.

அந்த ஒருவன் சிவன் என்பதை,
"சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார் இங்கு யாவரும் இல்லை"

என்னும் திருமந்திர பாடலடிகள் மூலம் தெரிய வருகிறது.

அன்பு சிவம்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

என்னும் திருமந்திரம் அன்பு வேறு சிவம் வேறு அல்ல அன்பே சிவம், சிவமே அன்பு என்னும் பேருண்மையை விளக்குகின்றது.

எல்லோருக்கும் உரிய இறைவர் ஒன்று அதுவே பரம்பொருள் அதுவே சிவம், அதன் பொருள் அன்பு என்று தமது கடவுள் கொள்கையை திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டவன் இன்னருள் என்பதிருந்து சிவம், சக்தி இரண்டும் இணைந்துள்ளமை புலப்படுகிறது. அர்த்தநாரீஸ்வரர் மூர்த்தம் திருமூலரின் சிந்தனையாகும்.

சைவம் சிவத்தை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவத் தமிழ் வரலாற்றிலே, சிவம், சைவம் ஆகிய சொற்பதங்கள், முதன்முதலில் எடுத்தாளப்பட்டமை திருமூலரால் என்பது குறிப்பிடத்தக்கது.

சைவம் சிவனுடம் சம்பந்த மாகுதல்
சைவம் தனையறிந்தே சிவம் சாருதல்

என்னும் திருமந்திரம் இதற்குச் சான்று.

திருமூலர் கூறும் சமய உண்மைகள் திருமந்திரம் முழுவதும் விரவியுள்ளன. அவற்றின் சாரம் பின்வருமாறு :

- **முப்பொருள் உண்மை (பதி, பசு, பாசம்)**
- **மூவகை உயிர் (சகலர்,பிரளயாகலர், விஞ்ஞானகலர்)**
- **மும்மலம் (ஆணவம், கன்மம், மாயை)**
- **முப்பத்தாறு தத்துவங்கள்**
- **நால் வகை நெறிகள் (சரியை,கிரியை,யோகம், ஞானம்)**
- **திருவைந்தெழுத்து**
- **திருக்கூத்து**
- **இருள் வீழ்ச்சி**

திருமூலரின் கருத்தை அறிந்து இவற்றை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியம். பின்னர் வந்தவர்கள் பலர் திருமூலரின் கருத்தை அறியாதவர்கள்போல் விளக்கம் தந்துள்ளனர். திருமூலரின் சமயச்சிந்தனைகள் சிலவற்றை மேலும் நோக்குவோம்: கடவுள், ஆத்மா, சுத்தசத்தி என்பன என்றுமுள்ளவை. அவை அழிவற்றவை உண்மையானவை.

இறைபரம்பெருளை முழுமையாக உணர்ந்து கொள்வதற்கு மெய்ஞ்ஞானத்தின்பால் தவிப்பும், தாகமும் ஏற்பட வேண்டும்.

இவைறவனிடம் கேட்க வேண்டியவை அருள், கருணை, அன்பு, ஞானம் ஆகியவற்றையே. இவை பெறப்பட்டால் நல்லொழுக்கத்திற்கு ஏதுவாகும். பொன்னையும், பொருளையும், போகத்தையும் வரங்களாகக் கேட்டுபெற்றால், அவை மனிதனின் தீயொழுக்கங்களுக்கு ஏதுவாகும். சைவநெறி - ஆகமநெறி தீயொழுக்கங்களை அனுமதிப்பது இல்லை.

சைவநெறி நின்று ஒழுகுவோர் அகவழிபாடு, புறவழிபாடு இரண்டையும் தவறாது செய்தல் வேண்டும்.

அகப் புறத் தூய்மையுடையவராய் அறங்கள் செய்வதும், எல்லோரிடத்தும் அன்பாய் இருத்தலும், நன்னடத்தையுடையவராய் நல்லொழுக்கங்களை வாழ்வில் மேற் கொண்டு ஒழுகுதலும் சைவசமய சாதனைகள் ஆகும்.

சமய வாழ்விற்கே, சைவம் முக்கியத்துவம் அளிக்கின்றது. ஆத்மிக சாதனை என்பதுவும் சமயவாழ்வையே குறிக்கின்றது. சைவத்தின் வெற்றி, அதன் சாதனையில் தான் உள்ளது.

பஞ்சாட்சரம் - நமசிவாய, சிவாயநம ஓம் - சிவமூலமந்திரம்

அன்புதான் சைவத்தின் பிழிந்த சாரம். அன்பினை முதலாக வைத்து, உண்மையான ஆர்வமும் சிரத்தையும் உடையராய் இறைவனை வழிபாடு செய்தலே சிறந்த வழிபாட்டு முறையாகும்.

*அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி*
*என் பொன்மணியை எய்த ஒண்ணாதே.....*

என்பது திருமந்திரம்.

அன்பு வழி வழிபாட்டிற்கு மாத்திரமின்றி, வாழ்கைக்கும் அதுவே துணை என்பது திருமூலர் நிலைப்பாடு. இறைவனை நாடுவது, அடைவது ஆத்மநேயத்தின பொருட்டேயாகும். ஆத்ம நேயம் அனைத்துலகம் தழுவியது. அத்தகையவரே உண்மைச் சமயிகள்.

உலக ஆசைகளை நிறைவு செய்ய வேண்டியும், உடல் இச்சையின் பொருட்டும் இறைவனை நாடி வழிபாடு செய்பவர்கள், துதிப்பவர்கள் சமயிகள் அல்லர்.

திருமூலர் சைவத்தை முழுமையாகவே நோக்கினார். வேதாந்தாமாகவோ, வேதாந்தத் தெளிவாம் சித்தாந்தமாகவோ மட்டும் சைவத்தை நோக்கவில்லை. சைவம் பின்வரும் ஆறு படிநிலைகளை அல்லது அங்கங்களை உள்ளடக்கியுள்ளமையைத் திருமூலர் தெளிவு படுத்துகிறார்.

1. போகாந்தம் 2. யோகாந்தம்
3. வேதாந்தம் 4. சித்தாந்தம்
5. காலாந்தம் 6. நாதாந்தம்

இவற்றைப் படிப்படியாகக் கடந்தே சைவத்தின் முழுமையை எய்த முடியும். பேரானந்தத்தில் திளைத்திருக்கும் பேறுதான் சைவத்தின் இறுதியான பயன்.

சிவம் என்பது உண்மை. அது தத்துவம். சைவம் அதன் செயற்பாடு. சைவம், மனித வாழ்வின் இலக்குகள் குறிக்கோள்கள் யாவையெனத் தத்துவத்தின் ஊடாகஇனங் காண்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும் அவற்றை எய்துவதற்கும் ஆன தத்துவத்தின் செயற்பாடு அம்சம் ஆகும். இந்த வகையில் சிவம், சைவம், வாழ்க்கை என்பவற்றிற்கிடையே நெருங்கிய தொடர்பினைக் காண்பதாகத் திருமூலரின் சமயச் சிந்தனைகள் அமைந்திருப்பது, அவற்றின் சிறப்பாகும்.

சமயச் சிந்தனைகள், வாழ்க்கையில் சாதனைகள் ஆக வேண்டும் என்பது திருமூலரின் பெருவிருப்பு. சாதனைக்குரிய மிக இலகுவான வழியொன்றைப் பின்வருமாறு காட்டுகின்றார்.

சகல உயிரினங்களினதும் அமைதியான, சாந்தமான வாழ்விற்கு பிரார்த்தித்து,

* இறைவனின் பாதங்களில் ஒரு பசுமையான இலையை வைத்து வழிபாடு செய்யுங்கள்.
* ஒரு பசுவிற்கு ஒரு பிடி புல் கொடுங்கள்

**47ம் பக்கம் பார்க்க ...**

## பெரியபுராணம்

(மு.சிவராசா)

சென்ற இதழ்த் தொடர்ச்சி

# முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்

### முருக நாயனார்

நாவரசர் இறைபதம் நண்ணிய தலம் பூம்புகலூர். அங்குள்ள சிவாலயம் வர்த்தமானீச்சரம் என வழங்கப்படும். அவ்வூரின் தோன்றினார் முருகனார் என்ற அந்தணர். அவர் வர்த்தமானீச்சரப் பெருமான் மீது அளப்பரிய பக்தி கொண்டார். பொழுது புலருமுன் எழுந்து நீரில் மூழ்கி நெஞ்சும் நாவும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தில் ஒன்ற கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ எனும் நால்வகை மலர்களையும், பள்ளித்தாமங்களையும் கொய்து திருப்பூங்கூடையில் சேர்ப்பார். அது போது புழுக்கடி, எச்சம், சிலந்திநூல், மயிர் இவ்றோடு கூடிய பூக்களும், மொட்டுக்கள், எற்கனவே மலர்ந்த பூக்கள், கீழே விழுந்த பூக்கள் ஆகியவையும் தவிர்க்கப்படும். பூமாலை கட்டும் மண்டபத்துக்குக் கொணர்ந்த அப் பூக்களை கோவை, இண்டை, தாமம், கண்ணி, பிணையால் தொங்கல் போன்ற பலவித மாலைகளாகத் தொடுத்து எம் பெருமானுக்குச் சாத்துவார். அந்த அந்த காலங்களுக்கேற்ற மாலைகளைச் சாத்தி அர்ச்சனை புரிவார்.

அம்மையின் திருமுலைப்பால் உண்டு சிவஞானம் பெற்ற திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரின் நண்பராயிருந்து பூம்புகலூரின் மூசுவண்டறை கொன்றை முருகன் செய் முடிமேல் வாச மாமலர் உடையார் வர்த்தமானீச்சரத்தாரே என்று அவரால் புகழப்பெற்றவர். அப்பெருமானுடைய திருமணம் தரிசிக்கச் சென்று நல்லூர்ப் பெருமணத்தில் தோன்றி சோதியுள் புகுந்து இறைவன் திருவடி அடைந்தவர்.

### உருத்திர பசுபதி நாயனார்

திருத்தலையூர் வேதியர் குலத்தில் பசுபதியார் அவதரித்தார். வேதவிற்பன்னர் ஆகிய அவர் வேதத்தின் உயர் பொருளாகிய ஸ்ரீ ருத்திரம் கொண்டு சிவன் மலர்ச் சேவடிகளை இடையறாது வழுத்தும் தொடர்பினில் நிலைநின்றார். தாம் வழுத்துதற்கேற்ற நீர்நிலை ஒன்றைத் தெரிந்தெடுத்தார். அத் தடாகத்தின் கரையில் பறவைகளின் ஒலியும், தடாகத்தில் மலர்ந்துள்ள செந்தாமரை மலர் நறுமணமும், அம்மலர்களைச் சுற்றியுள்ள வண்ணம் ரீங்காரம் செய்யும் வண்டுகளின் ஓங்கார நாதமும் அவருடைய ஸ்ரீ ருத்திர பாராயணத்துக்குத் துணையாய் இருந்தன.

கயத்தில் இறங்கி கழுத்தளவினதாகிய நீரில் நின்று கைகளை உச்சிமேல் கூப்பி இறைவன் அருள்வழி உருத்திரம் பயின்றார். இரவும், பகலும் தவறாது உருத்திரம் பயின்ற பசுபதியார் தீதிலா நிலைச் சிவபுரி எல்லையில் சேர்ந்தார். அவருக்கு உருத்திரபசுபதியராம் திருப்பெயரும் கூடிற்று.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் பெரும்பாலானோர் செயற்கரிய செயல்கள் புரிந்தது மட்டுமன்றி தம் வாழ்வில் அற்புதங்களுமி நிகழ்த்தி உள்ளனர். ஒரு சிலர் எம்போன்றவர்களாலும் கடைப்பிடிக்கத் தக்கதான கடமைகளில் ஒன்றையோ, சிலவற்றையோ வாழ் நான் முழுவதும் கடைப்பிடித்து எமக்கு வழிகாட்டியுள்ளனர்.

தாம் சங்கற்பித்து மேற்கொண்ட கடமைகளில் எந்நிலையிலும் தவறாது ஒழுகியமை அவர்களை மெய்யடியார் கூட்டத்துள் சேர்க்க வைத்து தாம் கொண்ட கொள்கையால் இறைவன் பேரருளுக்கு அவர்கள் பாத்திரர் ஆனார்கள். கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார் இடர் களைபவன் எம் பெருமானல்லவோ! நாள்தோறும் மலர் பறித்து மாலைகள் கட்டி இறைவனுக்கு சாத்துவிப்பது எவருக்கும் எளிதான காரியமே. அதே போல திருவைந்தெழுத்தை காலந்தவறாது ஜெபம் செய்தல் கடினமான தொன்றல்ல.

முருகநாயனாரும், உருத்திர பசுபதி நாயனாரும் நமக்கு காட்டிய வழியில் சென்று நாமும் உய்தி பெறுவோமாக.

**நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா**
**நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்கு**
**புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்**
**பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்**
**தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்**
**சங்கரா சயபோற்றி என்றும்**
**அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதீ என்றும்**
**ஆரூரா என்றென்றே அலறா நில்லே**

-அப்பர் சுவாமிகள்

காலவரையறை நிர்ணயிக்க முடியாத பழம் பெருஞ் சமயமான சனாதன நெறி என அழைக்கப்பட்ட இன்றைய இந்து சமயத்தின் கொள்கைகள் பலதரப்பட்ட இந்து சமூகத்தினரால் தவறாகப் பிரயோகிக்கப்பட்டு வரும் வலியுறுத்துகிறது. (உதாரணமாக: ஊன் தவிர்த்தல், பிறரின் மனதினை நோகவைக்கும் பொய், பொறாமை, புறங்கூறல், களவு என்பவற்றைத் தவிர்த்தல்) இந்தப் பஞ்சமாபாதகங்கள் எந்த அளவு தவறானது

# இந்து சமயம் கூறும் பஞ்சமா பாதகங்களும் இன்றைய இந்து சமுதாயமும்

-கயிலாயபிள்ளை-

இவ்வேளையில் இந்து சமயத்தால் விடுக்கப்பட்ட எச்சரிக்கையான பஞ்சமா பாதகங்களையும் அதனை மீறிய இன்றைய சமூகத்திற்கு ஏற்பட்ட அபார கொடிய விளைவுகளையும் பற்றிச் சற்று விரிவாகப் பார்ப்பது சாலச் சிறந்தாகும்.

பஞ்சமாபாதகங்களாவன:
சூதாடுதல்
மதுஉண்ணல்
மாமிசம் உண்ணல்
குற்றமுடைய பாலியல் உறவு
களவு

இந்த வகையில் இந்து சமயம் கூறிய பஞ்சமாபாதகங்களை இன்றைய இந்துக்கள் எந்த வகையில் தவிர்த்து வருகின்றார்கள் எனச் சற்று நுணுக்கமாக அலசி ஆராய வேண்டிய நிலையில் உள்ளோம்.

திருமந்திரத்தில் ஒன்றை உதாரணமாக நோக்கினால்,

உள்ளம் பெருங்கோயில் ஊன்உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளாமணிவிளக்கே

என உலகத்தில் வாழும் மக்களை இறைவன் உறையும் ஆலயத்திற்கு ஒப்பிட்டு மிகவும் எளிமையாகவும் அழகாகவும் விளக்கியுள்ளார். அதாவது ஆத்மாக்கள் உறையும் உடம்பானது ஆலயத்துக்கு ஒப்பானது என்றும் உளமானது இறைவனின் இருப்பிடம் என்றும் ஐம்புலன்களும் இறைவனுக்கு ஏற்றப்படும் ஒளிவிளக்கு என்றும் மிகத் தெளிவாகக் கூறுகின்றார்.

இந்த உட்கருத்தினையே ஐம்புலன்கள் நல்லவற்றையே நுகர வேண்டும் என்பது என்பதைனைச் சூக்குமமாக இப்பாடல் கூறியுள்ளது எனலாம்.

தெற்காசிய நாடுகளே அதிகமாக இந்து சமயத்தினைக் கடைப்பிடிக்கும் சமூகத்தினரைக் கொண்ட நாடுகளாகக் காணப்படுகின்றன.
இந் நாடுகளின் பொருளாதரப் பின்னணியினை நோக்கினால் இவை முற்றுமுழுதாக அபிவிருத்தி அடைந்து வரும் அதாவது வளர்முக நாடுகளாகவே உள்ளன. எனவே இந்துக்களுக்கு வறுமை ஒரு சொத்தாகவே அமைந்துள்ளது என்றால் அது தவறாகாது. ஆனால் நமது வறுமைக்கு நாமே காரணம் என்பதனையும் மறுப்பதற்கில்லை. இங்கு கீதையை எடுத்து நோக்கினால் கண்ணபெருமான் கூறுகின்றார் “தனக்குத் தானே நண்பன் - தனக்குத் தானே பகைவன்”

மேலும் கிருஷ்ண பரமாத்மாவால் விளக்கிக் கூறப்பட்ட தாமஸ, ராஜச, சாத்விக குணங்களை எடுத்து நோக்கினால் மிகவும் சோம்பல் உடையவர்களும், துணிவற்றவர்களும், மிகவும் தாழ்வு மனோபாவம் கொண்டு பொறாமை எரிச்சலுடன் செயல்படுபவர்களும் தாமஸ குணம் உடையவர்கள் என்றும் இப்படியானவர்கள் மிகவும் வறுமையுடன் ஏழைகளாக, பல கஷ்டங்களை அனுபவித்து அல்லல் உறுவார்கள் என்றும், மிகவும் பேராசையுடன் அகந்தை மிக்கவர்களாய், ராஜச கொள்கைகளுடன் செயல்படுவர்களை ரஜோ குணமுடையவர்கள் என்றும் இவர்கள் இவ்வுலகில் தாம் எண்ணியவற்றை எல்லாம் மிகவும் பேராசையுடன் அடைய முற்படுவார்கள் என்றும், மிகவும் சாந்தமும், பொறுமையும், அன்பும், கண்ணியமும் உடையவர்களை சாத்துவிக குணமுடையோர் என்றும் இவர்களே இறைவனால் விரும்பப்படுவார்கள் என்றும் மிகவும் விரிவாகக் கீதையில் விளக்கியுள்ளார்.

இன்றைய இந்துச் சமூகம் பொதுவாக தமோ, ரஜோ குணங்களைக் கொண்டதாகவே காணப்படுகின்றது. இதன் அடிப்படையிலேயே நம்மவர்கள் பல கொடுமைகளைச் செய்பவர்களாகவும் கொடுமைகளை அனுபவிப்பவர்களாகவும் கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றனர். அதாவது சாதிக்கொடுமை, சீதனக்கொடுமை, குழந்தைஊழியம், சிறுவர்களையும், பெண்களையும் பாலியல் மற்றும் பல்வேறு வகை ஹிம்சைகளுக்கும் வன்முறைக்கும் உள்ளாக்குதல், பொய்கூறிப் பிறரை ஏமாற்றுதல், திருமணத் தரகர்களின் அடாவடித்தனம், விபச்சாரம், கணவன் மனைவி வாக்குவாதம், மனைவியால் கணவனுக்கும், கணவனால் மனைவியும் கொடுமைகளுக்காளாதல், மாமி மாமா கொடுமை, பிச்சை எடுத்தல், மதுபானம், கள்ளச்சாராயம், போதைவஸ்து, புகைத்தல், சூது போன்றவற்றிற்கு அடிமையாதல் போன்ற இன்னோரன்ன கொடிய செயல்களில் நமது இந்துக்கள் ஈடுபட்டு வருவது பஞ்சமா பாதகங்கள் என்பதனையும் இவை இந்து சமய விதிமுறைகளுக்கு விலக்கு என்பதனையும் நம்மவர்கள் உணராததும் அதே நேரம் தம்மை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்வதும் மிகவும் ஏளனத்திற்கும் கவலைக்கும் உரிய செயலாகும்.

இந்த அடிப்படையில் இந்துக்களை பின்வருமாறு வகுத்து நோக்கினால்,

1) கோயில்களையும் மடங்களையும் உருவாக்கி இறைவனின் பெயரைக் கூறிக்கொண்டோ, அல்லது தானே இறைவன், அதாவது இறைவனின் அவதாரபுருஷர் எனக்கூறிக்கொண்டும், இந்து சமயத்தை விருத்தி செய்து வருபவர்களாயும், இந்து சமயத்தைப் பாதுகாப்பவர்களாகவும் கூறிக்கொண்டு முழுமையாகவும், உட்புறமாகவும் பஞ்சமா பாதகர்களாக வாழும் இந்துக்கள் ஒருபுறம்.

2) இந்து சமய விதிமுறைகளைக் கூறாமல், இறைவனைப்பற்றியும்கூறாமல் பஞ்சமா பாதகங்களை வெளிப்படையாகவும் உட் புறமாகவும் செய்துவரும் இந்துக்கள் ஒருபுறம் என இரண்டாக நோக்கினால் அது தவறாகாது.

இதன் அடிப்படையில் இன்றைய பக்தி மார்க்கத்தில் முக்கியம் பெறும் கோயில்களின் நடவடிக்கைகளைச் சற்று உற்று நோக்கி ஆராய்ந்தால் பல கோயில்களின் முக்கிய நோக்கம் பணம் உழைப்பதென்றே தோன்றுகின்றது. இதற்கு இறைவனின் சிலையை நம்மவர்கள் மூலப்பொருளாகப் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் அது மிகையாகாது. உலகில் பிரபல்யமாக விளங்கும் பல கோயில்கள் இன்று பெருமளவு பணத்தினைச் சம்பாதித்து வருகின்றன. குறிப்பாக இலங்கை, இந்தியக் கோயில்கள் அதிகளவு பணத்தினைச் சம்பாதிப்பதற்கு பலவகையான வியாபார யுத்திக-ளைக் கையாண்டு வருவதனை நாம் காணலாம்.

ஆனால் இக்கோயில்களின் முன்வாயிலில் பிச்சைக்காகக் காத்திருக்கும் முதியோர்களையும், அநாதைச் சிறார்களையும் இக்கோயில்கள் கண்டுகொள்வதில்லை. மேலும் கூறினால் இலங்கையில் கொழும்பில் காணப்படும் பணக்காரக் கோயில்களில் ஒரு திருமண வைபவத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட பணத்தினைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இதனை இலங்கையில் வாழ்ந்து வரும் சாதாரண ஏழைக் குடும்பம் இலகுவில் செலுத்திவிட முடியாது. எனவே அபிவிருத்தியடைந்த நாட்டுப் புலம் பெயர் இலங்கையரும் அவர்களின் உறவினருமே அதனைச் செலுத்தி திருமணத்தினைச் செய்யலாம். இவைகள் இந்து தர்ம விதிகளை மீறிய செயல்கள் என்றே வர்ணிக்கப்பட வேண்டும். ஆனால் பல தசாப்த காலங்களுக்கு முன்னர் இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணச் செல்வச்சந்நிதி போன்ற முருகன் ஆலயத்தில் இலவச திருமணங்கள் நிறைவேற்றப்பட்ட வரலாற்றை நாம் மறந்து விடவோ மறுத்துவிடவோ முடியாது. மேலும் சற்றுக் கூர்ந்து நோக்கினால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் புலம் பெயர்ந்த இந்துக்களால் ஒவ்வொரு வருடமும் கோயில்கள், கடைகள் உருவாவது போல் உருவாகி வருவது ஒரு புறத்தில் கேலிக்கூத்தாகவும் மறுபுறத்தில் வேதனைக்குரிய விடயமுமாகவே காணப்ப-டுகின்றது. இவை பற்றிய விபரங்கள் வானொலியிலும் பத்திரிகைகளிலும் விளம்பரங்களாகப் பிரசுரிக்கப்பட்டும் வருகின்றன. இக்கோயில்கள் சில சமயங்களில் திடீரென புடைவை மலிவு விற்பனை நிலையங்களாகவும், கலண்டர், டயரி, நல்லெண்ணெய், மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள் விற்பனை மையங்களாகவும் செயல்படுவதனை நாம் காணுகின்றோம்.

இந்து மதமானது பகவத்கீதையின் ஊடாக கூறுகிறது: செய்கின்ற செயல்களின் பலன்களை எதிர்பாராமல் செய்ய வேண்டிய செயல்களைச் செய்யவேண்டும்.

அதாவது செயலில் கிடைக்கப்பெறும் பலனைத் துறத்தல் வேண்டும். ஆனால் கடமையை

நிச்சயமாகச் செய்ய வேண்டும். கடமையை செய் பலனை எதிர்பாராதே என வலியுறுத்திக் கூறுகிறது.

இதனையே கவிஞர் கண்ணதாசன் தனது கவிதையில் மிகவும் அழகாகக் கூறினார்.

**"அர்த்தமுள்ள இந்து மதம் என்ன சொன்னது? அது அவர் அவர் கடமைகளை வகுத்துத் தந்தது"**

ஆனால் கோயில்களில் பூசைகளைச் செய்பவர்கள் தட்சணைக்காகவும், செய்விப்பவர்கள் வெறும் பகட்டிற்காகவும் மேற்கொள்வதைப் பல ஆலயங்களில் காணலாம். அத்தோடு நில்லாமல் போட்டியும், பொறாமையும் தற்பெருமையும் இங்கு பலரிடம் ஆதிக்கம் செலுத்துவதைக் காணக்கூடியதாயிருக்கின்றது. வேதகாலத்தில் கூறப்பட்ட பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற வர்க்க வேறுபாடானது அன்றைய காலத்தின் தொழிலின் அடிப்படையிலேயே காணப்பட்டு வந்தது. இங்கு ஒரு தொழில் இல்லாவிடில் மற்றயை தொழில்கள் செய்ய முடியாத நிலை உருவாகும் என்ற நிலையை மிகவும் உன்னிப்பாகக் விளங்கிக்கொள்ள வேண்டும். எனவே எல்லாத் தொழில்களும் சமூக ஒழுக்க வாழ்க்கைக்கு அத்தியாவசியமாகவே காணப்பட்டன. இங்கு உயர்வு தாழ்வு காணப்பட்டிருக்கவில்லை. பிராமணர்கள் எனக் கூறப்பபட்டவர்கள் உண்மையையும் மெய்ப் பொருளையும் சமூகத்திற்கு போதிப்பவர்களாகவே காணப்பட்டார்கள் என்பது வேதகால வரலாற்று உண்மை.

எனவே பிராமணர், சத்திரியர், வைஷ்யர், சூத்திரர் என்ற வேதகாலத்து வர்க்க வேறுபாட்டினை சாத்விக, ராஜச, தமோ குணங்களின் அடிப்படையில் உற்று நோக்கினால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் எனத்தரம் பிரித்தல் என்பது வர்க்க வேறுபாட்டில் இல்லை, மாறாக குணங்களிற்கு இணங்கவும் பண்புகளுக்கு இணங்கவுமே இறைவன் மக்களை உயர்ந்தோர் தாழ்ந்தோர் என நோக்கி நாம் செய்யும் பாவ புண்ணியங்களுக்கு ஏற்ப வினைகளை அனுபவிக்கச் செய்கின்றார் என்பது புலனாகின்றது.

"சலம் பற்றிச் சார்பு இல செய்யார் மாசுஅற்ற குலம்பற்றி வாழ்தும் என்பர்".

மாசற்ற குடிப்பண்புடன் வாழ்வோம் எனக் கருதி வாழ்வோர் வஞ்சனை கொண்டு தகுதி அல்லாதவற்றைச் செய்ய மாட்டார் என்கின்றார் திருவள்ளுவர்.

இதற்கிணங்க நாம் எமது எதிர்காலச் சந்ததியினரை சாத்துவிக குணமுடையவர் களாகவே உருவாக்க வேண்டியது நம்மவர்களின் தலையாய கடமையாகும். மாறாக நம்மவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சாதிக்கொடுமை எந்தவகையிலும் இந்து சமயத்திற்கு அப்பால் பட்ட ஒன்று என்பதனை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே உண்மையான அகத் தூய்மையான ஞானிகளையும் இந்து சமயத்தில் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட கல்விமான்களையும் அறிஞர்களையும் இனங்கண்டு சனாதன தர்மமான இந்து சமயத்தின் உண்மைத்தத்துவத்தை எதிர்காலச் சமூகத்தற்கு கற்பிக்க வேண்டியது நம்மவர்ககளின் அத்தியாவசியக் கடமையாகும். இந் நிலையில் நமது சமூகத்தின் முறையற்ற போக்குகளை அவதானித்து வரும் ஏனைய மதத்தினர் பொருளாதாரப் பின்னணியுடன் தொடர்பு படுத்தி இந்து சமயத்தைக் குறை கூறி மதமாற்றங்களை மேற்கொண்டு வருவது மிகவும் வேதனைக்குரியது. இது கண்டனத்துடன் விமர்சிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

மற்றும் இலங்கையில் தமிழர்களின் விடிவிற்காகவும், புனர்வாழ்விற்காகவும் இயங்கி வரும் நிறுவனங்களின் தலைவர்கள் ஆலயங்களைப் புனர்வாழ்வுத் திட்டத்தில் பங்கு கொள்ளும்படி அழைப்புவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது ஒரு வகையில் பரிகசிக்க வேண்டிய விடயமாகவும் கொள்ளலாம். இதற்குக் காரணம் பல கோயில்களால் இன்று சம்பாதிக்கப்பட்டு வரும் ரொக்கப்பணம், அளவுக்கு அதிகமான பணம் என்றால் அது தவறாகாது.
ஆனால் ஔவைப்பாட்டி கூறினார்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது -பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சர்வார் தமக்கு.

அதாவது இறைவன் எம்மிடம் எதிர்பார்ப்பது பூவேயாகும். இறைவனுக்கு மிகவும் பக்தி சிரத்தையுடன் பூவும், நீரும் கொடுப்பவருக்கு வாக்குச் செல்வம் நல்ல உள்ளம், அறிவுத்தாயின் அருள், உடல்நலம் என்பவை கிட்டும் என்கிறார் ஔவையார்.
ஆனால் இன்று தாயகத்திலும், பிறநாடுகளிலும் சில கோயில்கள் அளவுக்கு அதிகமான பணத்தை அபிஷேகம், வேள்விகள், அர்ச்சனைகள்

எனபவற்றுக்கு அறவிட்டு வருவது அறக்கேடு என்பதனை கோயில்களின் அறங்காவலர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். இவை ஒரு வகையில் கோயில்களின் அறங்காவலர்கள், தர்மகர்த்தா சபை என்பவற்றால் மேற்கொள்ளப்பட்டுவரும் தெய்வ நிந்தனை என்றே வர்ணிக்கப்பட வேண்டும்.

எனவே இன்றைய இயற்கைத் தாயின் சீற்றத்திற்கு நம்மவர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் மறச் செயல்களே காரணம் என்றால் அது தவறாகாது. இந் நிலையில் கோயில்கள் மக்களிடம் முறையற்ற வகையில் பணங்களை அறவிடும் மறச் செயல்களை நிறுத்தும் பட்சத்தில் மக்கள் தமது பணத்தை சமூகப்புனர்வாழ்விற்காகச் செலவு செய்ய முன்வருவர். அத்துடன் கோயில்கள் சனாதன தர்ம நெறியின் மெய்ப்பொருளை சமூகத்திற்கு போதிக்கும் பட்சத்தில் தர்ம நோக்கமுள்ள சிறந்த சிந்தனையுள்ள சமூகம் உருவாக ஏதுவாகும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. அத்துடன் இத்தர்ம சிந்தனையுள்ள சமூகம், சமூகப் புனர்வாழ்வுக்கழகங்களின் முயற்சிக்கு உள்ளார்ந்த ரீதியில் ஒத்துழைப்பு வழங்கவும் ஏதுவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

எனவே ஆலயம் என்பது இறைவன் உறையும் அரண்மனை. அது வியாபார நிலையமோ, அல்லது பண வசூல் செய்யும் நிலையமோ அல்ல என்றதனை நம்மவர்கள் உணர்வு பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாவர்.

இறைவனுக்கு பூவும் நீரும் பக்திசிரத்தையுடன் வழங்கினால் இறைவன் அருள் உடனேயே கிட்டும் என்பதில் ஐயப்பட வேண்டியதில்லை.

பஞ்சமா பாதகங்களில் நமது சமூகம் தொடர்ந்து ஈடுபட்டு வருவதனால் இன்றைய காலகட்டத்தில் இவ்வுலக மக்கள் அனைவருக்கும் கிடைக்கப் பெற்ற வினையின் விளைவுகளை கீழ்கண்டாவாறு நோக்கினால்

குற்றமுள்ள பாலியல் உறவுகளின் விளைவாக எயிட்ஸ் நோய் மாமிசம் உண்பதால் இருதய நோய், கொழுப்பு படிதல் என்பன விளையும் புகைத்தல், மது அருந்தல், போதை வஸ்துக்களுக்கு அடிமையாதல் என்பவற்றால் புற்றுநோய், காசநோய், போன்ற விளைவுகளும் பொய், களவு, கொலை போன்றவற்றால் மன நிம்மதியின்மை, மன உழைச்சல், மன அழுத்தம் போன்ற மன நோய்களும் ஏற்படுவது கர்ம வினையினால் கிடைத்த தண்டனைகளே என எண்ணத்தோன்றுகின்றது.

பட்டினத்தடிகள் **"தன்வினை தன்னைச் சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்"** எனத் தீர்க்க தரிசனமாகக் கூறியது இன்றைய எமது சமூகச் சீரழிவுகளை முன் கூட்டியே அறிந்து விட்டாரோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

எனவே இன்றைய எமது இலங்கைத் தாயானவள் இந்து சமயத்தில் பிறந்த புத்த பெருமானின் அரிய போதனைகளை தெளிவாக உணராத பௌத்த மதவாதிகளின் முறையற்ற ஆட்சிக்குள்ளாக் கப்பட்டு இலங்கை வரலாற்றையும், அதன் பூர்விக சமயமான சனாதன தர்ம நெறியையும் பாதுகாக்க முடியாமல் தர்ம யுத்தத்திற்குள்ளாகி அவலநிலையில் விடும் கண்ணீரால் நாம் அனைவரும் தோய்ந்து நனைந்து நடுநடுங்கி வாழும் இச் சூழலில் நம்மவர்களில் இன்று தோன்றியுள்ள எட்டப்பர்களுக்கு கர்ம வினை விளைவு எதுவாக அமையுமோ எனப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

மாறாக இந்து சமயத்தின் சுதந்திரக்காற்றைப் பரிபூரணமாக சுவாசித்து வரும் பாரத புண்ணிய பூமி இந்து சமயத்தின் எச்சிரிக்கையான பஞ்சமாபாதகத்தை உதாசீனம் பண்ணியதன் விளைவோ இன்று இந்தியா எயிட்ஸ் என்னும் கொடிய நோயில் சிக்குண்டு தடுமாறி தவிக்கிறதோ எனவும் எண்ணத்தோன்றுகின்றது.

மேலும் உலகின் மனச்சாட்சியாகக் காணப்படும் ஐக்கிய நாடுகள் சபை மனித நேயத்தைக் காக்க உருவாக்கும் சட்டங்கள் பஞ்சமா பாதகத்தின் எச்சரிக்கையின் எச்சமென்றால் அது மிகையாகாது.

எனவே பட்டினத்தடிகளாரின் **"காதற்ற ஊசியும் வாராது தான் தன் கடைவழிக்கே"** எனக்கூறிய அருளுரையை மீண்டும் நினைவு கூர்ந்து இந்து சமயமானது சமூகத்தை சுதந்திரமாகவும் சௌகரியமாகவும் தர்ம நோக்கிலும் வாழ்வதற்கு பல பரிந்துரைகளை முன்வைத்த சமயம் என்பதனை அனைவருக்கும் நினைவு படுத்தி எனது கருத்துக்களை இறைவனூடாக மக்களுக்குச் சமர்பிக்கின்றேன்.

*

# TULASIDAS துலசிதாசர்

*Story* : **K. Saraswathy** *Graphics* : **Sankar**

**1**

Rajpur is a town in Uttar Pradesh near Allahabad. Atmaram and Hularibai were a couple of that town. To them was born a son by the grace of Anjaneya and they named him Ram Bhola. Within a few days of the child's birth Hularibai passed away. Atmaram left the child in the care of his grandmother and went off somewhere.




**2**

The child grew up under the care of the grandmother. After four years the grandmother also died.
It became necessary for the boy Ram Bhola to seek the charity of the villagers even for food.




**3**

Once one Naraharidas came to Rajpur. He gave religious discourses and conducted Bhajans in the Anjaneya Temple. Ram Bhola participated in these events with great enthusiasm.




**4**



5

Wherever Naraharidas went for delivering discourses Ram Bhola also went.
It was the practice of Ram Bhola to do Bhajan before Naraharidas began his discourses.
Now his name got changed to Tula Ram.

6 Accompanying Naraharidas for fourteen years Tula Ram mastered the Vedas, Sanskrit, Upanishads, Puranas, Tarka and other sciences. He too began to deliver religious discourses like his master.




7 Endowed with youth, beauty and scholarship, earning a good income and possessing a lovely wife, gradually Tula Ram began to slip away from devotion to God. His mind was ever hovering around Ratnavalli. He would not like even to send her to her parents.

8 Once Tula Ram went to another place to give a religious discourse. Taking advantage of this Ratnavalli's brother wanted to take her to his house for a couple of days.




9

After Ratnavalli had gone to the parental home Tula Ram returned.
When it grew dark Tula Ram did not like to remain in a house where Ratnavalli was not. So he started immediately to see his wife.

**10** It was raining cats and dogs that night. The waters of the Ganga overflowed the banks. The whole village resembled an ocean.




